[2013 ஏப்ரல் 26

323—

வாசனை திரவியத் தொழிற்சாலை

***5785—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, மகாதேவகொல்லஹள்ளி பகுதியில் பயிரிடப்படும் பூக்களைப் பயன்படுத்தி அப்பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பர்கூர் தொகுதி, மகாதேவகொல்லஹள்ளியில் பூ சென்ட் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்திருந்தாலும்கூட ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அரசால் வழங்கப்படும் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்புப் பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்களை அவர்கள் பெற்று தொழில் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் குலமகளாம், தென்னகத்தின் ஒளிவிளக்காம், தமிழகத்தின் தலைமகளாம், இத்தரணி போற்றும் எங்கள் தாயே! தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வழி நின்று வாழ்வதில்தான் எங்கள் பேச்சும், மூச்சும், வாழ்வும், வளமும் உள்ளது எனச் சொல்லி அம்மா தங்களது பொற்பாதம் பணிந்து, வணங்கி மகிழ்கிறேன் அம்மா.*

மாண்புமிகு அம்மா அவர்களது பொற்கால ஆட்சியில்தான் தமிழகத்திலேயே அதிக பூக்கள் உற்பத்தி செய்யும் மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பது

2013 ஏப்ரல் 26]

அனைவருக்கும் தெரிந்த ஒன்று. கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மகாதேவகொல்லஹள்ளி, காட்டு அகரம் ஊராட்சி, பாலியகுடி ஊராட்சி, தளி ஊராட்சி போன்ற பல ஊராட்சிகளில் பூக்கள் உற்பத்தி செய்யும் தொழிலை அதிக அளவிலே செய்கிறார்கள். பருவ மழை இல்லாத காரணத்தினால் திருவண்ணாமலை மாவட்டம் தொடங்கி கிருஷ்ணகிரி மாவட்டம் வரையிலும், ஓசூர், தளி, வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி போன்ற அனைத்துப் பகுதிகளிலும் கரும்பு, நெல் போன்ற பெரிய அளவில் செய்யப்படும் விவசாயத்தை செய்ய இயலவில்லை. பருவ மழை தவறுகிற காரணத்தினாலும், குறைந்த அளவு தண்ணீர் உள்ளதாலும் குறுகிய நிலப்பரப்பிலே, அரை ஏக்கர், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற நிலப்பரப்பில், பூக்கள் விவசாயத்தை மட்டுமே முக்கியத் தொழிலாகச் செய்து அவர்கள் வாழ்வாதாரத்தை ஈட்டி வருகிறார்கள். பருவ மழை இல்லாதபோது இருக்கக்கூடிய குறைந்த நீர்வரத்தை வைத்து செய்யக்கூடிய ஓரே விவசாயம் பூக்கள் விவசாயம். எனவேதான் அதைச் செய்து, அந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பூக்களை கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூருவுக்கு குறித்த காலத்தில் அதிவிரைவில் எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயமிருப்பதால் வாகன விபத்துகள் நிறைய நடக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டம் தொடங்கி கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாக பெங்களூருவுக்கு வாகனங்களில் பூக்களை அதிவேகமாக எடுத்துச் செல்கின்றபோது விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் மிக அதிகமான பூக்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் வாழ்ந்துவருகின்ற காரணத்தினால், இந்நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை மிகுந்த பார்வைக்கு எடுத்துச் சென்று, மேற்படி மாவட்டங்களில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நீண்டதொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். தொகுதியின்மீது அவருக்கு இருக்கின்ற பற்றால், பாசத்தால் அவர் இந்தக் கேள்வியை விரிவாகக் கேட்டிருக்கிறார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 1,200 எக்டேர் நிலப்பரப்பில் ஆண்டு ஒன்றுக்கு 8,700 மெட்ரிக் டன் அளவிற்கு வாசனை மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிலே குறிப்பாக பர்கூர் பகுதியில் மட்டும் 70 எக்டேர் நிலப்பரப்பில் 385 மெட்ரிக் டன் அளவிற்கு வாசனை மலர்கள் விளைவிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய காவேரிப்பட்டணத்தில்கூட 400 எக்டேரிலே வாசனை மலர்கள் பயிரிடப்படுகின்றன என்பதெல்லாம் உண்மைதான். என்றாலும்கூட, சிறிய அளவிலே ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்றாலும் நாள் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் பூக்கள் இருந்தால் மட்டுமே அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். புதிய தொழில்முனைவோர் தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர் யாராவது வருவார்களேயானால், திட்ட மதிப்பீட்டில் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் 25% அரசு மானியத்துடன், 3% பின்முனை வட்டி மானியத்துடன்கூடிய கடனைப் பெற்று தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம் என்பதையும், அது மட்டுமல்லாது, பிரதமரின் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம், மாநில அரசின் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் பல்வேறு மானியங்களையெல்லாம் தருவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவே, இந்தத் திட்டங்களில் ஏதாவது ஒன்றின்மூலமாக தொழில்முனைவோர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட தொழில்முனைவோர் மையத்தில் விண்ணப்பிப்பார்களேயானால், இந்த மானியங்களையெல்லாம் பெற்று, அந்தத் தொழிலை அங்கே செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

2013 ஏப்ரல் 26]

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்குகிறேன். வாசனைத் திரவிய தொழிற்சாலையை அமைப்பதற்கு தனியார் தொழில்முனைவோர்கள் முன்வந்தால், அரசு அவர்களுக்கு ஊக்கம் தருவதோடு, பல்வேறு மானிய உதவிகளைச் செய்யும் என்பதை விளக்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து இடம் அமருகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 324, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

324—

தமிழ்க் கல்லூரி

***16549—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஒரு தமிழ்க் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் 4 அரசுக் கல்லூரிகளும், 5 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 8 சுயநிதிக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 17 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதில், தமிழுக்கு என இராமசாமி தமிழ்க் கல்லூரி என்ற பெயரில் ஓர் அரசு உதவிபெறும் கல்லூரி அழகப்பபுரம் என்ற கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், அவர் சார்ந்திருக்கின்ற தொகுதி மானாமதுரையில் 3 சுயநிதிக் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மானாமதுரை